## தேவேந்திரகுல வேளாளர்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றியுள்ளோம்

# தமிழக மீனவர் நலன்களை பாதுகாப்போம்

## ● சென்னையில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உறுதி



▲ சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று நடந்த விழாவில் பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். விழாவின் நிறைவில், முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரது கைகளை கோர்த்துக்கொண்டு உயர்த்திக் காட்டிய பிரதமர் மோடி.

படம்: க.ஸ்ரீபரத்

■ சென்னை

தமிழக மீனவர்களின் நலன்களை பாதுகாப்போம் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளார். தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றியதில் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசின் சார்பில் பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி ஒருநாள் பயணமாக நேற்று காலை சென்னை வந்தார். டெல்லியில் இருந்து தனி விமானத்தில் சென்னை வந்த பிரதமரை விமான நிலையத்தில் தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், டிஜிபி ஜே.கே.திரிபாதி, தமிழக பாஜக இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அங்கிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்ட மோடி, நேப்பியர் பாலம் அருகே உள்ள ஐஎன்எஸ் அடையாறு கடற்படைத் தளத்துக்கு வந்தார். அங்கு அவரை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர். பின்னர் கார் மூலம் தீவுத்திடல், சென்ட்ரல் வழியாக விழா நடந்த நேரு உள்விளையாட்டு அரங்கத்துக்கு பிரதமர் சென்றார். செல்லும் வழியில் 5 இடங்களில் பிரதமருக்கு பாஜக, அதிமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. சாலையோரம் திரண்டிருந்த தொண்டர்கள், பொதுமக்களைப் பார்த்து கையசைத்தபடி பிரதமர் சென்றார்.

நேரு உள்விளையாட்டு அரங்கில் நுழைந்ததும் அங்கு வைக்கப்பட்டிருந்த அர்ஜுன் எம்பிடி எம்கே 1-ஏ ரக ராணுவ கவச வாகனத்தை மோடி பார்வையிட்டார். அதன்பின் விழா தொடங்கியது. துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வரவேற்புரை ஆற்றினார். முதல்வர் பழனிசாமி தலைமை உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து, வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்கம், சென்னை கடற்கரை முதல் அத்திப்பட்டு வரையிலான 4-வது ரயில் வழித்தடம், விழுப்புரம் - தஞ்சாவூர் - திருவாரூர் மின்மயமாக்கப்பட்ட ஒருவழி ரயில் பாதை ஆகிய திட்டங்களை காணொலி காட்சி மூலம் பிரதமர் தொடங்கி வைத்தார்.

அத்துடன் கல்லணை கால்வாய் புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டம், செங்கல்பட்டு மாவட்டம் தையூரில் அமையவுள்ள சென்னை ஐஐடி டிஸ்கவரி வளாகம் ஆகிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்திய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட அர்ஜுன் எம்பிடி எம்கே 1-ஏ ரக கவச வாகனத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

பின்னர் பிரதமர் பேசியதாவது:

இன்று சென்னையில் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை மாநகர மக்கள் அளித்த அன்பான வரவேற்புக்கு நன்றி. இன்று தொடங்கப்பட்டுள்ள சென்னை மெட்ரோ முதல்கட்ட விரிவாக்கம், 4-வது ரயில் வழித் தடம், 228 கி.மீ. மின் மயமாக்கப்பட்ட ரயில் பாதை திட்டங்களால் தமிழகத்தின் வளர்ச்சி மேலும் அதிகரிக்கும்.

இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள 636 கி.மீ. நீள கல்லணை கால்வாயை சீரமைத்து, நவீனப்படுத்தும் திட்டம் பெரும் பலனைத் தரும். இதன்மூலம் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 2 லட்சத்து 27 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். தமிழகத்தின் நெற்களஞ்சியமாக காவிரி பாசன மாவட்டங்கள் திகழ கல்லணை கால்வாய் முக்கியமான காரணமாகும்.

### பாரதியார் பாடல்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், உலகின் பழமையான மொழியான தமிழில், 'ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம், குடைகள் செய்வோம்; உழுபடைகள் செய்வோம், கோணிகள் செய்வோம்; இரும்பாணிகள் செய்வோம், நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம், ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்' என்று பாடியிருக்கிறார். அதன்படி, இந்தியாவிலேயே அனைத்து பொருட்களையும் தயாரிக்க 'சுயசார்பு பாரதம்' என்ற கொள்கையை செயல்படுத்தி வருகிறோம்.

தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட அர்ஜுன் எம்பிடி எம்கே 1-ஏ கவச வாகனம், நாட்டின் வடக்கு எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும். இது இந்தியாவின் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. வாகன உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் தமிழகம், இப்போது ராணுவ டாங்கி உற்பத்தி மையமாகவும் மாறி வருகிறது.

தமிழகத்தில் பட்டியலின பட்டியலில் உள்ள 7 சமூகங்கள், தங்களை தேவேந்திரகுல வேளாளர் என்று அழைக்க வலியுறுத்தி போராடி வந்தன. அவர்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றியுள்ளோம். இனி அவர்கள் தேவேந்திரகுல வேளாளர் என்று அழைக்கப்படுவர். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட மசோதா, வரும் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும். இதற்காக தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு நன்றி.

இலங்கைத் தமிழர்களின் நலன்கள், உரிமைகளை பாதுகாப்பதில் எங்கள் அரசு உறுதியாக உள்ளது. யாழ்ப்பாணம் பகுதியில் 50 ஆயிரம் வீடுகள், மலையகத் தமிழர்களுக்காக 4 ஆயிரம் வீடுகள், மருத்துவமனைகள், ஆம்புலன்ஸ் சேவை, ரயில் பாதை, சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவை, யாழ்ப்பாணம் கலாச்சார மையம் என்று பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மூலம் இலங்கைத் தமிழர் நலன்களை உறுதி செய்து வருகிறோம். தமிழர் உரிமைகளை பாதுகாப்பது குறித்து இலங்கைத் தலைவர்களுடன் பேசிவருகிறோம். இலங்கைத் தமிழர்கள் சமத்துவம், நீதி, அமைதி, கண்ணியத்துடன் வாழ்வதை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை நீண்டகாலமாக உள்ளது. தமிழக மீனவர்களின் நலன்களை மத்திய அரசு பாதுகாக்கும் என்று உறுதி அளிக்கிறேன். இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வைத்துள்ளோம். இப்போது இலங்கை சிறைகளில் இந்திய மீனவர்கள் யாரும் இல்லை. 313 படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

### அவ்வையார் பாடலுடன் விவசாயிகளுக்கு பாராட்டு

விழாவில் பேசிய பிரதமர் மோடி, 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான்' என்ற அவ்வையாரின் பாடல் வரிகளை குறிப்பிட்டு, 'விவசாய நிலத்தின் வரப்பை உயர்த்தினால், வயலில் நீர் அதிக அளவில் தங்கும். அதிகமாக நீர் தங்கினால் நெல் விளைச்சல் அதிகமாகும். நெல் விளைச்சல் நன்றாக இருந்தால் மக்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். எங்கே மக்கள் வறுமையின்றி மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ, அந்த அரசே சிறப்பான அரசாங்கமாக விளங்கும். அப்படி சிறந்த அரசை ஆளும் மன்னன் நற்பெயர் பெறுவான்' என்ற பொருளையும் விளக்கினார்.

நீராதாரங்களை தமிழக விவசாயிகள் சிறப்பாக பயன்படுத்தி வருகின்றனர். நீர் மேலாண்மையில் தமிழக விவசாயிகள் சிறந்து விளங்குவதால் உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் சாதனை படைத்துள்ளது. இதற்காக தமிழக விவசாயிகளை பாராட்டுகிறேன் என்றார் மோடி.